AUGUST 02, 2020
SUNDAY
VOL: 006/062
RS. 10.00
LATE CITY

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror






# பேனைக்கு அனுமதி

வாக்களிப்பு நிலையங்களுக்கு வரும் வாக்காளர்கள், தங்களுடைய வாக்குகளை அளிப்பதற்காக, கறுப்பு அல்லது நீல நிறத்திலான குமிழ்முனை (போல் பொயிண்ட்) பேனையை எடுத்துச்செல்ல முடியுமென, தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# இருபதுக்கு முன் முதல் அமர்வு

ஒகஸ்ட் 5ஆம் திகதியன்று நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பில் தெரிவாகும் உறுப்பினர்களுக்கான முதலாவது அமர்வு, ஒகஸ்ட் 20ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படுமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



தொடர்ச்சி P2

விருப்புவாக்கு இறுதிப் பெறுபேறு;

# வெள்ளி இரவு வெளிவரும்



விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டு, அவ்வாக்குகளுக்கான இறுதிப் பெறுபேற்றை, ஒகஸ்ட் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வெளியிடுவதற்கு, தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

தொடர்ச்சி P2




# ‘இலங்கையில் அரசியல் சாசனம் இல்லை’



■ க. அகரன்

இந்த நாட்டின் அரசியல் சாசனத்தை, ஐனநாயகத் தீர்ப்பின் ஊடாகத் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் நிராகரித்திருக்கின்றார்கள் எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், இந்த நாட்டில், சட்டபூர்வமான ஓர் அரசியல் சாசனம் இல்லை.

தொடர்ச்சி P2

# ஐ.தே.க வேட்பாளர் மொட்டுக்குத் தாவினார்

ஐக்கிய தேசிய கட்சியின் மாத்தறை மாவட்ட வேட்பாளர் அச்சிரா இளங்கமகே,

தொடர்ச்சி P2

# வெங்காய வரி அதிகரிப்பு

ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்துக்கான விசேட வியாபாரப் பண்டத் தீர்வை, 35 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

# வேட்பாளர்கள் ஏழுவர் கைது

தேர்தல் சட்டதிட்டங்களை மீறியமை தொடர்பில், வேட்பாளர்கள் ஏழுவர் கைது செய்யப்பட்டுள்ளனரென, பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# காட்டு யானை தாக்கிய விரிவுரையாளர் மரணம்



காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் கற்பித்த பெண் விரிவுரையாளர்,

தொடர்ச்சி P2




# குழந்தையுடன் கும்மியடித்த அதிகாரிகளுக்கு ஆப்பு

முழுச் செய்தி P2

வெள்ளை வான் ஊடகச் சந்திப்பு;

# ராஜித, ரூமிக்கு எதிராக வழக்கு



முழுச் செய்தி P2









PAGE 1 தொடர்ச்சிகள்

# பேனைக்கு அனுமதி

எனினும், வேட்பாளர்களின் பெயர்கள், விருப்பு இலக்கங்களைக் கொண்ட பேனைகளை எடுத்துவர வேண்டாமென்றும் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, வாக்களிப்பதற்கு அங்கிகரிக்கப்பட்ட ஆவணங்களில் ஒன்றான சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான செல்லுபடியான காலம் காலாவதியாகியுள்ள போதிலும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருக்கும் சலுகைக் காலம் காலாவதியாகவில்லை எனில், அந்தச் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தலாம் என்றும், ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# ‘இலங்கையில் அரசியல் சாசனம் இல்லை’



அந்தவகையில், இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடு என்றார்.

வவுனியாவிலுள்ள தமிழரசுக் கட்சியின் காரியாலயத்தில், நேற்று (01) நடைபெற்ற கலந்துரையாடலிலேயே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் புதிய அரசியல் சாசனம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதனூடாக ஆட்சி அதிகாரங்கள் தொடர்பான விடயங்கள் பரிசீலிக்கபட்டு, அந்தந்தப் பிராந்தியங்களில் வாழ்கின்ற மக்கள், விசேடமாக வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற மக்கள், தங்களுடைய நாளாந்த விடயங்களைத் தாமே நிறைவேற்றுவதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அவர், மத்தியில் அதிகாரங்கள் குவிந்திருக்காமல், சமஷ்டிக் கோட்பாட்டின் அடிப்படையில் அவை பரவலாக்கப்பட்டு, உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் அந்தத் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்றார்.

> **“ 13ஆம் திருத்தத்தை, எமது பிரச்சினைக்கான முழுமையான தீர்வாக நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதில் பல குறைகள் இருக்கின்றன. அதியுச்ச அதிகாரப் பகிர்வில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்**

மக்களின் வாழ்க்கையில் அன்றாடம் இடம்பெறுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அதிகாரத்தைக் கொழும்பில் குவிக்காமல், அந்தந்தப் பகுதிகளில், மக்களால் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் மூலமாகவும் அமைக்கப்படுகின்ற சபைகளூடாகவும் அந்தக் கருமங்களை நிறைவேற்றும் வகையில், அந்தத் தீர்வு இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்ட சம்பந்தன், இது எமது நீண்டகாலப் போராட்டம்; இது ஒரு நியாயமான கோரிக்கை; இது அவர்களின் பிறப்புரிமை. இதற்காகவே தந்தை செல்வா, தமிழரசுக் கட்சியை உருவாக்கி, நீண்டகாலமாகப் போராடியிருந்தார் என்றார்.

13ஆம் திருத்தச் சட்டத்தை, எமது பிரச்சினைக்கான முழுமையான தீர்வாக நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதில் பல குறைகள் இருக்கின்றன. அதியுச்ச அதிகாரப் பகிர்வின் அடிப்படையில், இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அந்தந்தப் பிராந்தியங்களில் வாழ்கின்ற மக்கள், தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கக்கூடிய சூழல், சட்டரீதியாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

“இம்முறை தேர்தலில், 20 ஆசனங்களை நாம் பெறுவோமென எதிர்பார்க்கின்றோம். வன்னியில் ஆறு ஆசனங்களில் ஐந்தை நாம் பெறவேண்டும். அது, வன்னி மக்களின் கடமையாகும். யாழில் 6 ஆசனங்களைப் பெறவேண்டும். மட்டக்களப்பில் 4 பேரையும் திருமலையில் இரண்டையும் பெறுவதற்கான முயற்சிகளை எடுக்கின்றோம்” என்றார்.

“ஜனாதிபதியாக கோட்டாபய தெரிவு செய்யப்பட்ட இரண்டு நாளுக்குப் பின்னர், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். நீதியின் அடிப்படையில், கௌரவத்தின் அடிப்படையில் அது தீர்க்கப்பட வேண்டும் என்று, இந்தியப் பிரதமர் மோடி தெரியப்படுத்தியிருந்தார்” என ஞாபகப்படுத்தினார். .


ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்ட இரண்டு நாள்களுக்குள், இந்தியப் பிரதமர், தனது பிரதிநிதியை அனுப்பி, அந்த விடயத்தை ஜனாதிபதிக்குத் தெரிவித்திருந்தார். அது, நிறைவேற்றப்பட வேண்டும். இந்தக் கருமத்தை நிறைவேற்றுவோமென இலங்கை அரசாங்கம், இந்தியாவுக்குப் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கின்றது எனத் தெரிவித்த அவர், ஆனால், அது நிறைவேற்றப்படவில்லை. எனவே, இவற்றை நிறைவேற்றுவதற்கு உங்கள் சார்பில் ஒரு பலமான அணி, நாடாளுமன்றம் செல்லவேண்டியது அவசியமாகின்றது என்றார்.

# இருபதுக்கு முன் முதல் அமர்வு

புதிய நாடாளுமன்றத்தை அழைப்பதற்கான தினம், நேரம் உள்ளடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவினால், ஒகஸ்ட் 5ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் எனவும், அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

ஒகஸ்ட் 5ஆம் திகதி காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரையிலும், வாக்களிப்பு இடம்பெறும். 6ஆம் திகதி பெறுபேறுகள் வெளியாகும். விருப்பு வாக்குகள் 7ஆம் திகதியன்று வெளியிடப்படும். புதிய நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல், ஒகஸ்ட் 15ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படுமென, தேர்தல் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கான திகதி அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் தினத்தன்றே, புதிய நாடாளுமன்ற அமர்வு கூட்டப்படுவதற்கான திகதியும் குறிப்பிடப்படும். எனினும், கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாகத் தேர்தல் பிற்போடப்பட்டமையால், திகதியைக் குறிப்பிட முடியாத நிலைமையொன்று ஏற்பட்டது.



# வேட்பாளர்கள் ஏழுவர் கைது



புத்தளம், குருநாகல், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர்களே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என, தேர்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜேசூரிய தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் சட்டதிட்டங்களை மீறி, கடமைகளில் ஈடுபட்டனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் 10 பேருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்த அவர், தேர்தல் சட்டதிட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் கீழ், 320 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 360 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், தேர்தல் குற்றங்கள் தொடர்பில், 86 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

# ஐ.தே.க வேட்பாளர் மொட்டுக்குத் தாவினார்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் நேற்று (01) இணைந்துகொண்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவைச் சந்தித்த அவர், தனது ஆதரவை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குத் தெரிவித்தார். இவர், மாத்தறை மாவட்டத்தின் மூன்றாவது வேட்பாளர் ஆவார்.

இதேவேளை, மாத்தறை மாவட்டத்திலிருந்து ஐ.தே.கவின் பட்டியலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்த சந்தனா பிரியந்தா, எஸ்.டப்ளியூ. பிரேமரத்ன இருவரும், ஏற்கெனவே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெள்ளி இரவு வெளிவரும்



12,984 வாக்களிப்பு மத்திய நிலையங்களில், ஓகஸ்ட் 5ஆம் திகதியன்று நடத்தப்படும் தேர்தலில், 40 கட்சிகளின் சார்பில் 3,652 வேட்பாளர்களும் சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் 3,800 பேர் அடங்கலாக, மொத்தமாக, 7,452 பேர் தேர்தலில் இம்முறை போட்டியிடுகின்றனர்.

தேர்தல் பணிகளில், 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் ஈடுபடவுள்ளனர். பாதுகாப்புக்கென, 8,500 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# வெங்காய வரி அதிகரிப்பு

இதுவரையிலும் 15 ரூபாயாக இருந்த பண்டத் தீர்வை, 50 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்துள்ள நிதியமைச்சு, நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல், இது அமலாகியுள்ளதென அறிவித்துள்ளது.



உள்ளூர் வெங்காயம் சந்தைக்கு வந்துகொண்டிருப்பதால், உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையிலேயே, இந்தத் தீர்வை அதிகரிக்கப்பட்டுள்ளதென நிதியமைச்சு அறிவித்துள்ளது.

# காட்டு யானை தாக்கிய விரிவுரையாளர் மரணம்

சிகிச்சை பலனின்றி, 12 நாள்களுக்குப் பின்னர், நேற்றுமுன்தினம் இரவு 8 மணியவில் மரணமடைந்தார்.

தொழில்நுட்ப பீடத்தின், பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் கற்பித்த, பெண் விரிவுரையாளரான கொழும்பு-களனி பகுதியைச் சேர்ந்த காயத்ரி தில்ருக்ஷி (வயது 32) என்பவரே, இவ்வாறு மரணமடைந்துள்ளார்.



ஜூலை 19ஆம் திகதியன்று, காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளான அவர், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பலனின்றி, நேற்றுமுன்தினம் இரவு, அவர் உயிரிழந்துள்ளார்.

# குழந்தையுடன் கும்மியடித்த அதிகாரிகளுக்கு ஆப்பு

குழந்தைகளின் குறும்புத்தனங்களை இரசித்துகொண்டே இருக்கலாம். குறும்புத்தனங்களை இரசிக்காவிடில், இரசிக்கத் தெரியாத ஜடங்களாகவே இருப்பர். சில குறும்புத்தனங்கள், உயிருக்கே உலைவைத்துவிடுவதும் உண்டு. அவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இது தேர்தல் காலம் என்பதால், குழந்தைகளின் குறும்புகளைவிட, சில வேட்பாளர்களின் குறும்புத்தனங்கள் சகிக்கவே முடியாமல் இருக்கின்றன. வேட்பாளர்களுடன் இருக்கும் சகபாடிகளின் சண்டித்தனங்கள், அப்பப்பா... அடக்க முடியவில்லை. அவர்களது உறவினர்களின் உசுப்பேத்தும் செயல்களைப் பார்க்கவும் கேட்கவும் முடியவே இல்லை.

இன்று (02) நள்ளிரவு 12 மணியுடன் மௌனகாலம் ஆரம்பித்துவிட்டதால், மிகமிகக் கவனமாக இருக்கவேண்டும். எனினும், பிரசாரக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில சட்டவிரோதமான சம்பவங்கள், தேர்தல் கடமைகளுக்குச் செல்லவிருந்த அதிகாரிகளுக்கே ஆப்பு வைத்து விட்டன.


நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா - மஸ்கெலியா தேர்தல் தொகுதியில், பெரும்பான்மையாகத் தமிழர்கள் வாழ்ந்தாலும், ஆகக்கூடிய தமிழர் பிரதிநிதித்துவம் இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது. இதில், வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் உறவினர்கள் தேர்தல் சட்டதிட்டங்களை மீறியதால் அதுவே, அதிகாரிகளுக்கு ஆப்பாகிவிட்டது.

குழந்தைகளின் குறும்புத்தனங்களை விடவும் “குழந்தை” பெயரைக் கொண்டிருப்போரின் குறும்புத்தனங்களுக்கு ஒரு முடிவே இல்லை. இதனால், வேட்பாளர்களும் மூக்கின் மேல் கையை வைத்து, “குழந்தையின் குறும்பை” வேடிக்கை பார்க்கின்றனர்.

சோமபானத்தை அருந்திவிட்டு, பஸ் நிலையத்தின் கண்ணாடியை உடைத்த ‘சுட்டிக் குழந்தை’யின் குறும்புத்தனம், கூட்டங்களையே இரத்துச் செய்துவிட்டது. இதற்கிடையில், ஒகஸ்ட் 5ஆம் திகதி வாக்களிப்பு நிலையங்களில், சிரேஷ்ட தலைமைத்துவ அலுவலர்களாக (எஸ்.பி.ஓ) பங்கேற்கவிருப்போரை பங்களாவுக்கு அழைத்து, விருந்தொன்றையும் வழங்கிவிட்டதாகத் தகவல்.

இது உயரிடத்தின் காதுகளுக்குச் சென்றதையடுத்து, சிரேஷ்ட தலைமைத்துவ அலுவலர்களாகக் (எஸ்.பி.ஓ) கடமையாற்றவிருந்த அதிகாரிகளுக்கு, நுவரெலியா மாவட்டச் செயலாளர் அனுமதியளிக்கவில்லை எனவும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார் என்றும் செய்திகள் வந்துள்ளன.

‘குழந்தை’யுடன் சேர்ந்து கும்மியடித்ததால், அதிகாரிகளுக்கும் ஆப்பாகிவிட்டதென, சிவனொளிபாதமலையைத் தரிசிக்கச் செல்லும் வழிநடுவே பேசிகொள்கின்றனர்.



# ராஜித, ரூமிக்கு எதிராக வழக்கு

2019 ஜனாதிபதித் தேர்தலின் போது, அழுத்தங்களைப் பிரயோகித்த குற்றச்சாட்டின் கீழ், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும் ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் காசிம் மொஹமட் ரூமிக்கும் எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில், சட்ட மா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வெள்ளை வான்களில் மனிதர்களைக் கடத்தி, முதலைகள் நிறைந்திருந்த குளங்களில் உயிருடன் தள்ளிவிடப்பட்டனர் என, அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கப்பட்டது. இது பொய்யான காரணங்களாகுமென குற்றஞ்சாட்டியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், போலியான தாடியை வைத்துகொண்டு, ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றிருந்த சரத்குமார, அதுல சஞ்ஜீவ மதனாயக்க ஆகியோரைப் பயன்படுத்தி, போலியான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு ராஜித சேனாரத்னவும் மொஹமட் ரூமியும் தூண்டினர் என்ற குற்றச்சாட்டின் கீழே, இவ்விருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வெள்ளை வான்களில் மனிதர்களைக் கடத்திச் சென்று படுகொலை செய்தமை, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வசமிருந்த ஒருதொகை தங்கத்தை, ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்‌ஷ மறைத்து வைத்துக்கொண்டாரென, போலியான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்குத் தூண்டுகோலாக இருந்தனரென, இவ்விருவருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2019 ஜனாதிபதித் தேர்தலில், அழுத்தங்களைப் பிரயோகித்தல், போலியாகச் சாட்சியளித்தமை, அதற்கான சூழ்ச்சிகளை மேற்கொண்டமை, பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியமை ஆகியனவும் பிரதிவாதிகளுக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளில் சிலவாகும்.



தேர்தல் பிரசாரப் பணிகள் நிறைவு;

## இன்று நள்ளிரவு முதல் அமைதிக்காலம் அமல்

2020 பொதுத் தேர்தலுக்கான அனைத்துப் பிரசார நடவடிக்கைகளும், இன்று (02) நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளதாக, தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எனவே, இன்று (2) நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர், பிரசாரக் கூட்டங்களை நடத்துதல், தோட்டங்கள் அல்லது வீடுகளில் பிரசாரங்களை நடத்துதல், வீடு வீடாகச் சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடல், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், கட்சிக் காரியங்களில் விளம்பரப் பதாதைகளை வைத்தல், சுவரொட்டிகள், விளம்பரங்கள், பதாகைகளைக் காட்சிப்படுத்தல் உள்ளிட்ட அனைத்து விதமான பிரசாரப் பணிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக, ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொவிட் 19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான சுகாதார அறிவுறுத்தல்கள் காரணமாக, பிரசாரங்களை முன்னெடுப்பதில் பின்னடைவு ஏற்பட்டதால், இன்னும் இரு தினங்களுக்கு, பிரசாரப் பணிகளில் ஈடுபடுவதற்கான அனுமதியைத் தருமாறு, கட்சிகளின் செயலாளர்கள், தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

எனினும், சட்டரீதியான தடைகள் மற்றும் பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புகள் காரணமாக, பிரசாரங்களை முன்னெடுப்பதற்கான கால எல்லையை நீட்டிப்பதற்கு ஆணைக்குழு மறுத்துவிட்டது.

இந்நிலையில், இன்று நள்ளிரவு 12 மணியுடன் ஆரம்பமாகவுள்ள அமைதிக் காலப்பகுதியில், சகல கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், வேட்பாளர்களும், சட்ட விதிமுறைகளை மதித்து நடக்குமாறும் அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.










கந்தகாடு முகாமுக்குள்

# கொரோனா நோயாளிகள் தொகை 600ஆக உயர்வு




கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளான ஒருவர், நேற்று (01) அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர் கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் பணியாற்றுகின்ற நபரொருவரின் உறவினர் எனவும் அறியப்பட்டுள்ளார்.

அதன்படி, நேற்று (01) வரையில் 600 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளான நிலையில், கந்தகாடு புனர்வாழ்வு மய்யத்தில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் எனவும் கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மய்யம் அறிவித்துள்ளது.

அதன்படி, புனர்வாழ்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள 482 கைதிகளும், புனர்வாழ்வு மய்யத்தின் பணியாள் தொகுதியைச் சேர்ந்த 66 பேரும், அழைப்பின் பேரில் பணியாற்ற வந்த 5 ஊழியர்களும், ஊழியர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 46 பேரும், வெலிக்கடை சிறைசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் உட்பட மொத்தமாக 600 பேர், இவ்வாறு சிகிச்சை பெற்று வருவதாகவும் அந்த மய்யம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு, நேற்று முன்தினம் இரவு (31), EK - 648 விமானத்தினூடாக டுபாயிலிருந்து 335 பேரும் நேற்றைய தினம் (01) QR- 668 விமானத்தில் கட்டாரிலிருந்து 20 பேரும் அழைத்து வரப்பட்டதோடு, அவர்கள் சகலரும் இராணுவத்தின் கீழுள்ள புனர்வாழ்வு மய்யங்களில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, இராணுவத்தால் வழிநடத்தப்படும் கொரோனா தடுப்பு மய்யங்களில் புனர்வாழ்வு பெற்ற 28 பேர், வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில், மிஹிந்தலை முகாமிலிருந்த 13 பேரும் பெரடைஸ் ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 15 பேரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, நேற்று (01) வரையில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்துகொண்ட 28,792 பேர் வீடுகளுக்குச் சென்றுள்ளதோடு, முப்படையினரின் கீழ் நிர்வகிக்கப்படும் 33 தனிமைப்படுத்தல் மய்யங்களில், 1,866 பேர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாகவும், மய்யம் தெரிவித்துள்ளது.

அதேபோல், நேற்று முன்தினம் (31) நடத்தப்பட்ட 1350 பரிசோதனைகளுடன், இதுவரையில் இலங்கையில் நடத்தப்பட்ட மொத்த பிசிஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை 15,626 ஆகப் பதிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், நேற்று (01) 58 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடுகளுக்கு அனுப்பட்டிருந்தனர் என்பதோடு, அவர்களில் 6 பேர் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் என்பதோடு, ஏனைய 52 பேரும் உள்நாட்டில் அறியப்பட்ட நோயாளிகள் எனவும் தடுப்பு மய்யம் சுட்டிக்காட்டியுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில்

## பயணிகள் வெளிவருகைக்கான தளத்தின் நிர்மாணப்பணி ஆரம்பம்



கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகைதரும் பயணிகள் வெளிவருவதற்கான 2ஆவது தளத்தை அமைப்பது தொடர்பான தெளிவூட்டல்கள், நேற்று முன்தினம் (31), விமான நிலையத்தின் சில்க் ரூட் வளாகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தை, எதிர்வரும் மூன்று வருடங்களில் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் ஆலோசகராக, ஜப்பான் நிறுவனமான 'நிபோன் கோயி' செயற்படவுள்ளதுடன், இத்திட்டத்துக்காக, ஜெய்க்கா நிறுவனத்திடமிருந்து, 62 பில்லியன் ஜப்பான் யென்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு, இதன் நிர்மாணப் பணிகளை, ஜப்பான் தாய்பேயி கோர்ப்பரேஷன் முன்னெடுக்க உள்ளதுடன், இந்த வேலைத் திட்டத்துக்காக, வருடாந்தம் 9 மில்லியன் ரூபாயைப் பயன்படுத்தும் இயலுமை, விமான நிலையத்துக்குக் கிடைக்கும்.

அதன்படி, முழுமையாக 15 மில்லியன் ரூபாய்களை வருடாந்தம் செலவிடுவதற்கான இயலுமை, கட்டுநாயக்க விமான நிலையத்துக்குக் கிடைக்கும் என்பதோடு, இந்தத் தளமானது, 180,000 மீற்றர் பரப்பளவைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

இந்தத் தளத்தில், பயணிகள் பாலங்கள் 02, மேல் நோக்கியதான பிரவேச வீதி, வாகனப் போக்குவரத்து வீதி, மாடிகளைக் கொண்ட வாகனத் தரிப்பிடம், உணவகம் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்குமென குறிப்பிடப்பட்டுள்ளது.

## குழந்தை பிரசவித்த பெண் உயிரிழப்பு; ஐவர் கைது

பாறுக் ஷிஹான்

குழந்தைப் பேறுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூன்று பிள்ளைகளின் தாய் இறந்தமையால் கல்முனை ஆதார வைத்தியசாலை முன்பாக நேற்று (01) அமைதியின்மை ஏற்பட்டது.

வெல்லாவெளி, பாக்கியல்ல சின்னவத்தை பகுதியைச் சேர்ந்த 34 வயதான மாசிலாமணி சிவராணி, குழந்தைப் பேறுக்காக, கல்முனை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (31) அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சிவராணிக்கு ஆண் குழந்தை பிறந்த நிலையில், திடீரென ஏற்பட்ட உடல்நலக்குறைவையடுத்து சிவராணிக்கு மீண்டும் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும், இந்தச் சிகிச்சையாலேயே தாய் இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையின் முன்பாகக் கூடிய இறந்த பெண்ணின் உறவினர்கள், பொதுமக்கள் இணைந்து, நீதியைப் பெற்றுத்தரக் கோரியும் வைத்தியரின் அசமந்த நிலையையும் கூறி, அமைதியின்மையை ஏற்படுத்தினர். இதேவேளை சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், அமைதியின்மையை ஏற்படுத்திய ஐவரைக் கைது செய்துள்ளனர்.

## 'தொல்பொருள் இடங்களுக்கு பாதிப்பு ஏற்பட இடமளியேன்'

வழிபாட்டுத் தலங்களின் வரலாற்றுப் பாரம்பரியம், தொல்பொருள் சொத்துகளுக்குச் சேதத்தை ஏற்படுத்த எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சகல வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க இடங்களையும் பாதுகாத்து, வெல்லஸ்ஸ பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் வேலைத்திட்டத்தை உருவாக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக மொனராகல மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். வெல்லஸ்ஸ பண்டைய மதிப்பை சுற்றுலாத்துறைக்காக பயன்படுத்த வாய்ப்பு இருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, புதுருவகல, பதலஆர குளம் உள்ளிட்ட குளங்களைப் புனரமைப்புச் செய்து, விவசாயத்துறையின், முன்னேற்றத்துக்குப் பாரிய பங்களிப்பைச் செய்ய முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பூசணிக்காய், தர்ப்பூசணி உள்ளிட்ட உற்பத்திகளை ஆரம்பிக்கவும் மிளகு, தோடம்பழ உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



இ.தொ.காவின் முன்னாள் பொதுச்செயலாளர்

## எம்.எஸ்.செல்லசாமி நேற்று காலமானார்



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான எம்.எஸ்.செல்லசாமி, தனது 95ஆவது வயதில், நேற்று சனிக்கிழமை (01) காலமானார்.

எம்.எஸ்.செல்லசாமி, வயது மூப்பு காரணமாக உயிரிழந்துள்ளார் என்று, அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

1926.12.11ஆம் திகதியன்று, தலவாக்கலை - மடகும்புற தோட்டத்தில், சுந்தரலிங்கம் - அன்னப்பூரணிக்கு மகனாகப் பிறந்த அவர், ஹட்டன் சென். பொஸ்கோ பாடசாலையில், தமது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார்.

சமூகச் சேவைகளிலும் பொதுப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட அவர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஊடாக அரசியலுக்குள் காலடி எடுத்து வைத்தார்.

42 வருட அரசியல் அனுபவம் பெற்ற இவர், 1988ஆம் ஆண்டில், அரசியலுக்குப் பிரவேசித்தார்.

1990இல் மாகாண சபை, 1991இல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருந்த எம்.எஸ். செல்லசாமி, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் பதவி, கைத்தொழில் விஞ்ஞான அமைச்சுப் பதவிகளை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்த

## 349 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிந்த 349 இலங்கையர்கள் நேற்று (1) அதிகாலை கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய டுபாயிலிருந்து 335 இலங்கையர்களும் டோஹாவிலிருந்து 14 இலங்கையர்களும் நாட்டை வந்துள்ளனரென விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நேற்று முன்தினம் (31) மாலை 6.30 மணியளவில், சீனாவின் ஷங்காய் விமான நிலையத்திலிருந்து, இலங்கையின் முதலீட்டு திட்டத்தில் கடமையாற்றும் 29 சீனர்கள் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு இலங்கையை வந்தடைந்த அனைவருக்கும் விமான நிலையத்தில் பிசிஆர் பரிசோதனைகள் செய்யப்பட்டு உள்ளதுடன்,இவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## பாரிய மரம் வீழ்ந்து ஓட்டோ, வீடு சேதம்

### 35 வீடுகளுக்கு மின்சாரம் துண்டிப்பு

கே. சுந்தரலிங்கம்



ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வனராஜா கீழ்ப்பிரிவு தோட்டத்தில், நேற்று முன்தினம் (31) பாரிய மரமொன்று வீழ்ந்ததில், வீட்டுக்கும் வீட்டின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த வீட்டுக்கு அருகில் இருந்த பாரிய முருங்கை மரமே இவ்வாறு வீழ்ந்துள்ளது. இந்த மரம் அடியோடு முறிந்து வீழ்ந்ததால், அருகில் இருந்த மின்கம்பிகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பிரதேசத்தில் இருந்த சுமார் 35 வீடுகளுக்கு மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை காய்ந்த அந்த மரம் தொடர்பாக அந்த வீட்டின் உரிமையாளர் தோட்ட நிர்வாகத்துக்கும் கிராம சேவகருக்கும் முன்னரே அறிவித்திருந்தபோதும், உரிய நடவடிக்கைகள் எடுக்காததாலேயே இந்த விபத்தைச் சந்திக்க நேர்ந்துள்ளதாக வீட்டின் உரிமையாளர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

> **வீட்டுக்கு அருகில் இருந்த பாரிய முருங்கை மரமே இவ்வாறு வீழ்ந்துள்ளது. இந்த மரம் அடியோடு முறிந்து வீழ்ந்ததால், அருகில் இருந்த மின்கம்பிகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது**

காலாவதியான

## 'சாரதி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி வாக்களிக்கலாம்'




காலாவதியாகி இருந்தாலும், நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, சாரதி அனுமதிப்பத்திரம் செல்லுபடியான ஆவணமாகக் கருதப்படுமென, தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக, காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணக் காலத்தை நீட்டிக்க, மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

அதற்கமைய, மார்ச்சிலிருந்து ஜூன் வரை வழங்கப்பட்டிருந்த நிவாரணக் காலம், ஜூனிலிருந்து செப்டெம்பர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்தி, வாக்களிப்பதற்கான வாய்ப்பைத் தேர்தல் ஆணைக்குழு வழங்கியுள்ளது.



## அனுஷாவுக்கு ராஜகுலேந்திரன் ஆதரவு

இரா.யோகேசன்

மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ராஜகுலேந்திரன், நுவெரலியா மாவட்டத்தில் கோடரி சின்னத்தில் போட்டியிடும் அனுஷா சந்திரசேகரனுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளார்.

அனுஷாவுக்கு ஆதரவு தெரிவித்து, தலவாக்கலையில் நேற்று (01) நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது, அவர் அனுஷாவுடன் இணைந்து கொண்டுள்ளார். தேர்தல் நெருங்கி வரும்வேளையில், அனுஷாவுக்கு ஆதரவு அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 'சுனாமி' கைது

இந்தியாவுக்குத் தப்பிச்சென்ற நிலையில் தலைமறைவாகியுள்ள, பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினரான அங்கொட லொக்கா எனப்படும் லசந்த சமிந்த பெரேராவின் அடியாள் ஒருவர், மேல் மாகாணத்தின் தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லேரியா - களனி மாவத்தையில், சட்டவிரோதமாக மணல் துறைமுகத்தை நடத்திச் சென்ற, பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினரான 'சுனாமி' என்றழைக்கப்படும் ரங்கன என்பவரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

'சுனாமி' என்பவரைக் கைது செய்தபோது, அவரிடமிருந்து கைக்குண்டொன்றும் வாள் ஒன்றும் மீட்கப்பட்டதாக, மேல் மாகாணத்தின் தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## 'தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் மாற்று அணி நாமே'



தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் மாற்று அணி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியாகவே இருக்கும் என கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரும் நோக்கில், வன்னி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று (1) நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது கட்சியானது, வடக்கு - கிழக்கு மாகாணங்கள் உட்பட 7 மாவட்டங்களில் இம்முறை போட்டியிடுகின்ற நிலையில், மக்கள் எமது கட்சியின் பின்னால் அணிதிரண்டு வரும் நிலையில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை வழங்குவதற்கு தயாராக இருக்கிறேன் என்றார்.

மக்கள் கோரியதன் அடிப்படையில் இம்முறை வீணைச் சின்னத்தில் எமது கட்சி களமிறங்கிய நிலையில், மக்கள் தமது வாக்குப் பலத்தால் எமது கட்சியை பேரம் பேசும் சக்தியாக மாற்றுவதற்கு சிறந்த அடித்தளத்தை வழங்க வேண்டும் என்றார்.

"தன்னையும் காத்து தன்னை நம்பியுள்ள மக்களையும் பாதுகாப்பதே சிறந்த தலைமைத்துவத்தின் வெளிப்பாடாகும். அவ்வாறல்லாமல் கிடைக்கும் சந்தர்ப்பங்களை தமது நலனுக்காக பயன்படுத்திவிட்டு மக்களை ஏமாற்றும் தலைமைத்துவத்தை இதுவரை நாம் மேற்கொள்ளவில்லை" என்றார்.

"சந்திரிக்கா அரசாங்கத்தில் வலி வடக்கை சுவீகரிக்க முற்பட்டபோது 9 நாடாளுமன்ற உறுப்பினர்களை கைவசம் வைத்திருந்த ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, நாடாளுமன்றத்தை பகிஷ்கரிப்போம் எனக்கூறி வலிவடக்கு சுவீகரிப்பை தடுத்தது. ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தபோது தமிழ் மக்களின் அழிவைக்கூட இவர்களால் காப்பாற்ற முடியவில்லை. நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை தமது சொந்த அரசியல் நலனுக்காக பயன்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களைப் பற்றி சிந்திப்பதில்லை இதனை மக்கள் தற்போது உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

# ‘வறுமையை ஒழிப்பதற்காக ஆரம்பித்த பயணத்தை நிறுத்த மாட்டேன்’



எத்தனை தடைகள் வந்தாலும் வறுமையை ஒழிப்பதற்காக முன்னெடுக்க ப்பட்ட பயணம் நிறுத்தப்பட மாட்டாதென்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவுத் தெரிவித்து, பதுளையில் நேற்று (01) நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்துரைத்த அவர், கடந்த காலங்களில் சிலருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தாலும் ஏழை மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றுச் சுட்டிக்காட்டினார்.

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தில், மக்களுக்கு முன்வைத்த வாக்குறுதிகளை அவ்வாறே நிறைவேற்றுவதுடன், தேர்தல் நிறைவு பெற்றதும் உடனடியாகக் குறைந்த வருமானம் உடையவர்கள், பட்டதாரிகளுக்காக திட்டமிடப்பட்ட ஒரு இலட்சத்து ஐம்பாதாயிரம் வேலைவாய்ப்புகளை வழங்கவுள்ளதாகவும் உறுதியாளித்தார்.

கல்விg; பொதுத்தராதர சாதாரண தரம், உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கு பயிற்சியுடன் தொழில்களை வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டைப் பற்றிச் சிந்திக்கும் தலைவர் ஒருவர், அதிகாரத்துக்கு வந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவ்வேலைத்திட்டத்தை இடைநடுவில் தடுப்பதே, தந்திரமான அடிப்படைவாதிகளின் நோக்கமாக இருந்ததாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எவ்வித அடிப்படையுமின்றி துறைமுகம் சார்ந்த விடயங்களில் குழப்ப நிலையை உருவாக்குவதற்காக ஒரு சிலர் முயற்சிக்கின்றனர் என்றும் தன்னை அச்சப்படுத்துவதற்கு அவர்களால் முடியாதெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, வறுமையை ஒழிப்பதற்கு முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை இடைநடுவில் கைவிடச் செய்வதற்கு எவர் ஒருவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாதென்றும் குறிப்பிட்டார்.

இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள மொரன் வாய்க்கால் செயற்றிட்டத்தை உடனடியாக நிறைவு செய்து மஹியங்கனை பிரதேசத்தில் நிலவுகின்ற குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.




## ‘வாக்குரிமையைத் தவறாது பயன்படுத்துங்கள்’

### கண்காணிப்பு அமைப்புகள் கோரிக்கை

சுகாதார வழிகாட்டல்களுக்கமைய தேர்தலை நடத்துவதற்கான ஒத்திகைகள் பலவற்றையும் தேர்தல் ஆணைக்குழு முன்னெடுத்து, தேர்தலுக்கான அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டுள்ளதால், வாக்கெடுப்பு நேரம் தொடர்பில் பிரச்சினையொன்று எழப்போவதில்லை என, பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.


அத்துடன், பொதுமக்களுக்கு உள்ள வாக்களிக்கும் உரிமையை, தாமதமின்றியும் தயக்கமின்றியும் பயன்படுத்துமாறும், அவ்வமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

வாக்களிப்பின் போது, திட்டமிட்டே வாக்களிப்பு நிலையத்துக்குள் அதிக நேரத்தைச் செலவளித்து, குறிப்பிட்ட காலத்துக்குள் சில தரப்பினர் வாக்களிப்பில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக, தேசப்பற்றுள்ள ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி, உரிய சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்பட்டு உள்ளதால், இவ்வாறான விடயங்கள் தொடர்பில் வீண் அச்சங்கொள்ளத் தேவையில்லை என்று கூறினார்.




# இந்த தேர்தலில் உங்கள் வாக்கு யாருக்கு?



நீங்கள் எந்தக் கட்சி அல்லது வேட்பாளருக்கு வாக்களித்தாலும் உங்கள் வாக்கு நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றது.

கண்ணால் பார்க்கும் காதால் கேட்கும் பிரசாரங்களைக் கண்டு முடிவெடுக்காமல் உங்கள் பிரதிநிதியை நீங்களே தீர்மானிக்க வேண்டும்.

நீங்கள் கீழே தரப்பட்டுள்ள Score Card இல் உங்கள் விருப்பத்திற்குரிய வேட்பாளர்களின் பெயர்களை ஒழுங்கு வரிசைப்படி எழுதி கீழே குறிப்பிட்டுள்ளவாறு புள்ளிகளை வழங்குங்கள்.

| அரசியல் கட்சி / சுயாதீன குழு | உங்களது மாவட்டத்துக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் | மக்களது தேவைப்பாடுகள் தொடர்பில் கரிசனையுடையவர் | நியாயமாக பணம் சம்பாதிப்பவர் | அதிகாரத்தை தவறாக பயன்படுத்தாதவர் | இலஞ்சம், மோசடி குற்றச்சாட்டு இல்லாதவர் | நாட்டின் சட்டங்கள், கொள்கைகள் தயாரிப்பிற்கான அறிவுடையவர் | சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாதவர் | நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் கொண்டவர் | இன, மத, கலாசார வேறுபாடுகளை ஏற்றுக்கொள்பவர் | செயற்திறன் மற்றும் செயலூக்கமுடையவர் | மக்களது கருத்துக்களை செவிமடுப்பவர் | மொத்த புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

ஒவ்வொரு தலைப்பின் கீழும் வேட்பாளருக்கு வழங்கக் கூடிய அதிகபட்ச புள்ளிகள் 10 ஆகும்.

கிடைத்துள்ள புள்ளிகளின் கூட்டுத் தொகையை வைத்து உங்கள் வாக்கினை / விருப்பு வாக்கினை நீங்கள் தீர்மானிக்கலாம். அப்படி இல்லாவிட்டால், பாராளுமன்ற உறுப்பினரிடம் இருக்க வேண்டுமென நீங்கள் கருதும் தகுதிகளை தாள் ஒன்றில் எழுதி தகுதியுடைய வேட்பாளர்கள் அதிகமாக இருக்கின்ற கட்சி அல்லது வேட்பாளர்களைத் தெரிவு செய்யுங்கள்.

உங்கள் வாக்கு உங்கள் பிள்ளையின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றது.

பொறுப்புள்ள வாக்காளராக வாக்களியுங்கள்

PAFFREL

இது பஃவ்ரலின் செய்தி

# இன்றைய தினத்தை ஆக்கபூர்வமாக்குங்கள்...

இறுதிப் பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் இன்று நள்ளிரவுடன் நிறைவடைகின்றன. பொதுத் தேர்தல் காலத்தில், தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த, சுகாதார ஏற்பாடுகளுடனான பிரசார சுதந்திரத்தை, வேட்பாளர்கள் முழுமையாகப் பயன்படுத்தினார்களா என்றால் அது கேள்விக்குறிதான். தமது கொள்கை நிலைப்பாடுகளை, மக்கள் மத்தியில் கொண்டு செல்வதிலும் பார்க்க, பிற கட்சிகளின் குறைகளைச் சுட்டிக்காட்டிப் பேசுவதிலேயே பல கட்சிகளில் பிரதிநிதிகள் காலத்தை விரயம் பண்ணிவிட்டார்கள். இத்தகைய நிலையில், இன்று நள்ளிரவு வரை இருக்கும் சந்தர்ப்பத்தையாவது அனைத்து வேட்பாளர்களும், சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

புதன்கிழமை 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் மிக முக்கியத்துவமானது. 25 பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகளைச் சார்ந்த 3,652 வேட்பாளர்களும், 313 சுயேச்சைக் குழுக்களைச் சார்ந்த 3,800 வேட்பாளர்களுமாக மொத்தம் 7,452 வேட்பாளர்கள் இம்முறை களத்தில் இறங்கியிருக்கிறார்கள். இவர்களில் 196 உறுப்பினர்கள்தான் நேரடியாக மக்களின் வாக்குகளால் தெரிவாகவுள்ளார்கள். 196 உறுப்பினர்களைப் பெறுவதற்காக 7,452 வேட்பாளர்கள் களமிறங்கியிருப்பது கவனிக்கத்தக்கது. இவர்கள் தவிர, மேலதிகமாக 29 உறுப்பினர்கள் தேசிய பட்டியலூடாகத் தெரிவுசெய்யப்படுவார்கள்.

இம்முறை பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 162 இலட்சத்து 63 ஆயிரத்து 885 ஆகும். இந்தப் பதிவுசெய்யப்பட்ட வாக்குகளில் கிட்டத்தட்ட 12 மில்லியன் வாக்குகள் இம்முறை பதிவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வாக்குப் பதிவுகளில் தங்களுக்கான விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கான பலப் பரீட்சைகளே இப்போது நடைபெறுகின்றன.

ஆட்சியமைப்பதற்கான 113 என்ற குறைந்தபட்ச ஆசனம் என்பது ஓரளவு உறுதியாகியுள்ள நிலையில், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாடாளுமன்றில் நிரூபிப்பதற்காக ஆளுங்கட்சியாகிய ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, முனைப்புடன் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஆகையால், இம்முறை பிரசாரம் என்பது கட்சி சார்ந்ததாக அல்லாமல், வெறுமனே விருப்பு வாக்குகளுக்குள்தான் முடங்கிப்போயிருக்கிறது. அத்தகைய விருப்பு வாக்குகளைத் தம்வசப்படுத்த வேண்டுமானால், இன்று நள்ளிரவு வரை வேட்பாளர்களுக்கு நேரம் இருக்கிறது.

பிறகட்சித் தோலுரிப்புகளைக் கைவிட்டு, சொந்த உள்குத்துகளைக் கைவிட்டு, மக்களுக்கு வழங்கவேண்டிய யதார்த்தபூர்வ வாக்குறுதிகளை வழங்குவதனூடாவே மக்கள் மனதை வெல்ல முடியும். இறுதிச் சந்தர்ப்பத்தைச் சரியானமுறையில் வேட்பாளர்கள் பயன்படுத்துவதுபோல், யாருக்கு வாக்களிப்பதென்பதையும் வாக்காளர்கள் சிந்தித்துத் தீர்மானிப்பது எதிர்காலத்துக்குச் சிறந்தது.

தமிழ் Mirror
www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk

## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கடன் வாங்குவதைப்போல, இம்சை வேறில்லை. அவ்வாறு வாங்கினாலும், பெற்ற கடனை முழுமையாகச் செலுத்திவிட வேண்டும்.

கடனைத் திருப்பிச் செலுத்தாமல் விடுவதாலும் அரை குறையான தொகையைக் கொடுப்பதாலும் ஏற்படும், அவமானங்களும் தொல்லைகளும் ஒருவரின் வாழ்க்கையை ஸ்தம்பித நிலைக்கு உள்ளாக்கிவிடும். செலுத்தப்படாத தொகையே, மீண்டும் தொற்றும் நோயாக வளர்ந்து, மிகப் பெரும் சுமையாகிவிடும்.

ஆடம்பரப் பொருள்களை வாங்குவதற்குக் கடன் பெறுவது மன்னிக்க முடியாத குற்றம். எவரிடமும் இரந்து பொருள், பணம் கேட்பது தன்மானத்தையும் சுயகௌரவத்தையும் ஈடுவைப்பதற்குச் சமமாகும்.

ஆனால், அத்தியாவசியமான காரணங்களால், வேறு வழியின்றி கடனைப் பெறுவதுடன், அதை மீளக்கொடுக்கும் வசதி இருக்கின்றதா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்; அதுதான் மிக முக்கியமாகும்.

வசதி அற்றவர்கள், தங்கள் காணி, பூமியை அடகு வைத்து, மீளமுடியாது தவிப்பதும், அதனால் மனஅழுத்தமடைந்து, விரக்தியின் உச்சத்துக்கே சென்றுவிடுகிறார்கள். வரவுக்கு ஏற்ற செலவு செய்வதே, கடன் பெறுவதை இல்லாமல் செய்யும். சிக்கனமே சுபீட்சத்துக்கான வழியாகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மறைந்து போகும் மனிதத் தன்மை

அபிவிருத்தியைப்பற்றி மாத்திரமே இன்றைய காலத்தில் பேச்சாக இருக்கிறது. அதற்குத் தேர்தல் காலம்தான் காரணம்.

பண்பாடு, மொழி, கலாசாரம் ஆகியவை அழிந்து வருகின்றன என்று, எல்லோரும் கவலை கொள்கிறோமே தவிர, அவற்றைப் பேணுவதற்காக நாம் எல்லோரும் பிரயத்தனம் செய்கின்றோமா என்றால், இல்லை என்றே பதில் கிடைக்கும். அதேபோன்றுதான், மக்கள் மத்தியில் மனிதம் கூட மறைந்து கொண்டே வருகிறது. நாம் எல்லோரும் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையானது, சதாகாலமும் எனக்கு மட்டுமே சொந்தம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் நாம், ஏன் அது எல்லோருக்குமானது என்று, எண்ணம் கொள்வதில்லை? இது குறித்து யாரும் யோசிப்பதே இல்லை.

சாதாரணமாக வீதியில் நடந்து செல்லும் போது கூட, மனிதத்தன்மையற்றவர்களாக வாழும் நம்மவர்களின் மனோநிலையில் மாற்றம் தேவை.

வீதிகளில் வாகனங்களை நிறுத்தும் போது, சைக்கிள்களை, மோட்டார் சைக்கிள்களை நிறுத்தும் போதும் மற்றவர்களுக்கு நம்முடைய செய்கை இடைஞ்சலாக இருக்குமா என்று, ஒருவர் கூடச் சிந்திப்பதாக இல்லை.

அநேக விபத்துகளுக்கும், உயிர்ப்பலிகளுக்கும் கூட, மனிதத் தன்மையற்ற நடவடிக்கைகளே செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஒவ்வொருவரும் தங்களுடைய சந்ததிகளை ஆன்மிகப் பழக்க வழக்கங்களுடன், மனிதத் தன்மையுள்ளவர்களாக வளர்த்தெடுக்கப் பாடுபடுவதற்குப் பழகிக்கொள்வது எப்போது என்பதுதான் கேள்வி?

–அரவிந்தன்

பொதுஜன பெரமுன

# மாகாண சபை முறையிலும் கைவைக்குமா?



எம்.எஸ்.எம். ஐயூப்

பிரதமர் மஹிந்த தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஓகஸ்ட் ஐந்தாம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைத் தருமாறு பொதுமக்களிடம் கோருவதானது, வெற்றுக் காசோலையொன்றைக் கேட்பதற்குச் சமமாகும். ஏனெனில், அந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பாவித்து, என்ன செய்யப் போகிறார்கள் என்பதை, அவர்கள் நாட்டு மக்களுக்கு இன்னமும் கூறவில்லை.

“இல்லை! நாம் கூறியிருக்கிறோம்; அந்த, மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பாவித்து, அரசியலில் பெரும் குழப்பத்தை விளைவிக்கும் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை, நாம் நீக்கிவிடுவோம்” என, பொதுஜன பெரமுனவினர் கூறலாம்.

உண்மைதான்! அவர்கள், அவ்வாறு கூறித்தான் இருக்கிறார்கள். ஆனால், 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்கிவிட்டு, அத்தோடு நின்றுவிட்டால், நாட்டில் அராஜகமே நிலவும். ஏனெனில், அதற்கு முன்னர் இருந்த அரசமைப்பில் இருந்த ஜனாதிபதிப் பதவி, பிரதமர் பதவி, நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கான பிரமாணங்களைத் திருத்துவதற்குப் பதிலாக, 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம், அவை தொடர்பாகப் புதிய பிரமாணங்கள் அரசமைப்புக்குள் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே, 19ஆவது திருத்தம் நீக்கப்பட்டால், ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்றம் ஆகியவை, இல்லாத ஒரு நிலைமை உருவாகும்.

எனவே, அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தைத் திருத்தத்தான் முடியும். பொதுஜன பெரமுனவினர் பதவிக்கு வந்தால், அதைத்தான் செய்வார்கள். ஆயினும், புதிதாக என்ன வகையான மாற்றங்களைக் கொண்டு வரப் போகிறார்கள் என்பது, பெரமுனவின் தலைவர்களுக்காவது தெரியுமா என்பது சந்தேகமே. சிலவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ ஆகியோரிடம் அதைப் பற்றிய ஒரு திட்டம் இருக்கலாம்.

ஆனால், அவர்கள் அதை வெளியிடாமல் தான், அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை, மக்களிடம் கோருகிறார்கள். எனவே, அது வெற்றுக் காசோலையைக் கோருவதற்குச் சமமாகும்.

அதேவேளை, அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தோடு, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தையும் நீக்க வேண்டும் என, பொதுஜன பெரமுனவின் சில தலைவர்களும் பெரமுனவைச் சார்ந்த சில பிக்குகளும், தேர்தல் மேடைகளில் கூறி வருகிறார்கள்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தமானது, மாகாண சபை முறையை அறிமுகப்படுத்துவதற்காக, 1987ஆம் ஆண்டு, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதாகும். எனவே, மாகாண சபைகளை ஒழிக்க வேண்டும் என்றே, அவர்கள் கூறுகிறார்கள்.

ஜனாதிபதியோ பிரதமரோ, எந்தவொரு தேர்தல் மேடையிலும் இதைக் கூறவில்லை. ஆனால், இதைக் கோருவோர், தமது சொந்த அபிப்பிராயமாக இதைக் கோருகிறார்களா, மேலிடத்திலிருந்து கிடைத்த ஆலோசனையின்படி அவ்வாறு கோருகிறார்களா என்பது தெரியவில்லை.

இவர்களுக்குப் புறம்பாக, முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொடவும், அதே கோரிக்கையை முன்வைத்ததாகச் சில ஊடகச் செய்திகள் கூறின. ஏனையவர்களின் கருத்தை விட, அவரது கருத்து வித்தியாசமானது. ஏனெனில், 18 ஆண்டுகளுக்கு முன்னர், அவர் சமஷ்டி முறையை ஏற்றுக் கொண்டவர் ஆவார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே, 2002ஆம் ஆண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட போது, பேச்சுவார்த்தைக்கான அரசாங்கத்தின் தூதுக்குழுவில், அக்கால அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், மிலிந்த மொரகொட, ரவூப் ஹக்கீம் ஆகியோரே அங்கம் வகித்தனர்.

இவர்கள், 2002ஆம் ஆண்டு நவம்பர், டிசெம்பர் மாதங்களில், நோர்வே நாட்டின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, இனப் பிரச்சினைக்கு, சமஷ்டி முறையிலான தீர்வொன்றைக் காண்பதென்ற இணக்கப்பாட்டை, புலிகளுடன் ஏற்படுத்திக் கொண்டனர். அதே மொரகொட, இப்போது மாகாண சபை முறையை இரத்துச் செய்ய வேண்டும் என்கிறார்.

மாகாண சபைகளை ஒழிக்க வேண்டும் என்று, ஜனாதிபதியோ பிரதமரோ எந்தவொரு தேர்தல் மேடையிலும் கூறாவிட்டாலும், மாகாண சபை முறையை மட்டுமற்றி, அதிகாரப் பரவலாக்கல் முறையையே அவர்கள் விரும்பாதவர்கள். 2013ஆம் ஆண்டு, வடமாகாண சபைக்குத் தேர்தல் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது, மாகாண சபைகளின் அதிகாரங்களை மேலும் குறைத்து, அத் தேர்தலை நடத்த முயன்றார்கள்.

கோட்டாபய ராஜபக்‌ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற உடனும், இந்திய அரசாங்கத்தின் கருத்தை நிராகரித்து, அதிகாரப் பரவலாக்கல் முறையை இரத்துச் செய்வதற்கான சமிக்ஞையைக் கொடுத்தார். அவர், ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து 24 மணித்தியாலத்தில், இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்ஷங்கர், இலங்கைக்கு விஜயம் செய்தார். அப்போது அவர், ‘சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவற்றுக்கான தமிழ்ச் சமூகத்தின் அபிலாசைகளை நிறைவேற்றும் தீர்வொன்றை அடைவதற்காக, இலங்கை அரசாங்கம் தேசிய நல்லிணக்கத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் என்ற இந்தியாவின் எதிர்ப்பார்ப்பை’ ஜனாதிபதி கோட்டாபயவிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி, பதவியேற்று 11 நாள்களில், இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். அப்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இதேகருத்தை, இதேவார்த்தைகளில் ஜனாதிபதியின் முன்னிலையில் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். “இதில் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதும் அடங்கும்” என்றும் மோடி கூறினார். அப்போது அதை நிராகரிக்காத ஜனாதிபதி, மறுநாள், ராஜபக்‌ஷ குடும்பத்தின் நண்பரும் முன்னாள் அமைச்சருமான சுப்பிரமணியன் சுவாமியின் மகளும் ‘இந்து’ பத்திரிகையின் ஊடகவியலாளருமான சுஹாசினி ஹைதருக்கு வழங்கிய பேட்டியில், இந்திய அரசாங்கத்தின் கருத்தை நிராகரித்திருந்தார். “நாம் அரசியல் காரணங்களைப் பற்றிப் பேசலாம். ஆனால், 70 ஆண்டுகளாக அவ்வப்போது வந்த தலைவர்கள், ஒரு வாக்குறுதியை வழங்கினார்கள். அதிகாரப் பரவலாக்கல், அதிகாரப் பரவலாக்கல், அதிகாரப் பரவலாக்கல் என்றார்கள். ஆனால், இறுதியில் எதுவும் நடைபெறவில்லை. பெரும்பான்மைச் சமூகத்தின் விருப்பத்துக்கும் உணர்வுகளுக்கும் மாறாக, எதையும் செய்ய முடியாது என்று நான் நினைக்கிறேன்” என கோட்டாபய அந்தப் பேட்டியின் போது தெரிவித்தார்.

அதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர், இந்தியாவின் ‘பாரத் சக்தி’, ‘எஸ்.என்.ஐ’ இணையவழி ஊடகங்களின் ஆசிரியரான நித்தின் ஏ. கொக்கலேயுடன், கொழும்பில் நடத்திய பேட்டியின் போதும் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார்.

எனவே, பொதுஜன பெரமுன இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில், வெற்றி பெற்றுப் பதவிக்கு வந்தால், அதிகாரப் பரவலாக்கல் முறையைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்கள் மாகாண சபைகளையும் ஒழித்துவிடுவார்களோ என்ற சந்தேகம் எழுகிறது. இந்தநிலையில், வடக்கில், தமிழ்த் தலைவர்கள், தமிழ் மக்களுக்குப் பல்வேறு எதிர்பார்ப்புகளை வழங்கி வருகிறார்கள். “நாம், தேர்தலில் வெற்றி பெற்றால், இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் உதவியுடன், இனப்பிரச்சினை தொடர்பாக, இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, சமஷ்டி முறையை அறிமுகப்படுத்துவோம்” என, அவர்கள் கூறுகிறார்கள்.

இணைந்த வடக்கு, கிழக்கில் இறையாண்மையுடனான உயர்ந்த மட்ட சுயாட்சியை, சமஷ்டி அடிப்படையில் வென்றெடுப்பதாக முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருக்கிறது. அதற்காக, சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் கூறியிருக்கிறது. இந்த விடயத்தில், இந்தியாவை எந்தளவு நம்பலாம் என்பதே, தற்போதுள்ள கேள்வியாகும். இப்போது இருப்பது, 1980களில் இருந்த இலங்கையோ இந்தியாவோ அல்ல. அதேவேளை, இந்தியா எப்போதும், தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே, இலங்கையின் தமிழ் பிரச்சினையைப் பாவித்துள்ளது.

இந்து சமுத்திர வலயத்தில், தமது பிரதான போட்டியாளரான அமெரிக்காவுக்கு ஆதரவாக, ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன செயற்பட்டமையால், அவரைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவே, இந்திரா காந்தி, 1980களில் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதங்களையும் பணமும் வழங்கினார். மத்தள விமான நிலயம், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் ஆகியவற்றின் மீது, கண் வைத்துக் கொண்டு இருந்த நிலையிலேயே, 2017ஆம் ஆண்டு இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்ஷங்கர், வடக்கு, கிழக்கு இணைப்புத் தொடர்பான கோரிக்கையைக் கைவிடுமாறு, ஈ.பி.ஆர்.எல்.எப.இன் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரனிடம் சூசகமாகத் தெரிவித்தார்.

எனவே, வரப்போகும் காலம் மிகவும் முக்கியமானதாகும்.

என் பேச்சைக் கேட்டிருந்தால்

# ‘ஐ.தே.க ஆட்சி நிலைத்திருக்கும்’



ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்த மக்கள் ஆணையை மய்யப்படுத்தி ஆட்சியில் நீடிப்போம் எனத் தான் கூறியிருந்தாகத் தெரிவித்த அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.கவிலுள்ள சிலர், அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாமல், எதிர்க்கட்சியாக அமர வேண்டுமெனக் கோரியமையாலேயே, இன்றுவரை தக்கவைத்திருக்க வேண்டிய ஆட்சி அதிகாரத்தைக் கைவிட நேர்ந்தது எனவும் தெரிவித்தார்.

ஐ.தே.க ஆட்சி நீடித்திருக்கும் பட்சத்தில், சரியான முறையில் கொரோனா அச்சுறுத்தலை முறியடித்திருக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில், ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், ஜனாதிபதித் தேர்தலின் பின்பும் ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்திருப்பதற்கான இயலுமை, ஐக்கிய தேசிய கட்சிக்கு இருந்தபோதும், ஐ.தே.கவிலிருந்த சில அமைச்சர்கள் பதவி விலகி, எதிர்க்கட்சியில் அமரத் தீர்மானித்ததாலேயே, ஜனாதிபதியிடம் தாம் ஆட்சி அதிகாரத்தைக் கைவிடப்போவதாக அறிவித்திருந்ததாகவும் தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டிலும், புலிகளால் வடக்கிலுள்ள தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் முடக்கப்பட்டதால், அந்தத் தேர்தலில் தான் தோல்வியடைய நேர்ந்ததாகத் தெரிவித்த அவர், அந்தத் தோல்வியைத் தழுவிக்கொண்டு, அடுத்த 10 வருடங்களுக்குள் ஆட்சியமைக்கத் தன்னால் முடிந்தது எனவும் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டுத் தேர்தலின் போது, ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்ததோடு, பிரதமருக்கான அதிகாரங்களே வலுப்பெறும் என்ற நிலைமை காணப்பட்டதாலேயே, தான் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கியிருந்தாகவும் தெரிவித்தார்.

அதேபோல், இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சியில் புதிய முகங்களைக் களமிறக்குவதாகத் தான் தீர்மானித்திருந்தாகவும் அக்கட்சியிலிருந்த சில உறுப்பினர்கள் மீது, நாட்டு மக்கள் அதிருப்தி அடைந்திருந்தமையாலேயே தான் அந்த நிலைப்பாட்டில் இருந்தாகவும் தெரிவித்தார்.

இருப்பினும், அவ்வாறு தான் கூறியதை, சில உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கடந்த தேர்தலில், சிங்கள மக்களின் வாக்குகள் பற்றிச் சிறிதளவும் பொருட்படுத்தாமையே தோல்விக்குக் காரணமானது என்பதோடு, ஐ.தே.கவின் வாக்குகளும் மொட்டின் வசமானது என்றார்.

இன்றும், ஐக்கிய மக்கள் சக்தி அந்தப் பிழையை விடுகின்றது எனத் தெரிவித்த அவர், அந்தக் கட்சி, சிறுபான்மைக் கட்சிகளை மாத்திரமே நம்பியிருக்கும்போது, மொட்டுக் கட்சி சிங்களவர்களை மாத்திரமே நம்பியிருகின்றது என்பதால், சகல இனத்தவருக்கும் பாதுகாப்பான கட்சியாக, ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமே உள்ளதெனவும் தெரிவித்தார்.



வாக்களிக்கும் விடயத்தில்

## ‘பொதுமக்கள் கவனமெடுக்கவும்’

### மட்டு. மறைமாவட்ட ஆயர் வேண்டுகோள்

ஏ.எச்.ஏ. ஹூஸைன், எம்.எஸ்.எம்.நூர்தீன்

“இம்மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பொதுமக்கள் அனைவரும் சிறிது நேரத்தை ஒதுக்கி வாக்களிக்கச் செல்ல வேண்டும்” என மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசெப், பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆயர் பொன்னையா ஜோசப் அங்கு மேலும் கருத்துரைக்கையில், “நான் அரசியல் சார்பற்றவன். எந்த அரசியல் கட்சிகளையும் சாராதவன். அரசியலுக்கு அப்பால் எல்லா மதங்களுக்கும் பொதுவாகவே சேவை புரிந்து வருகின்றேன். வாக்களிப்பது மனித உரிமை. அது எமது கடமையுமாகும்.

“சிறையிலிருப்பவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்கவேண்டுமென நான் முன்னர் கோரிக்கை விடுத்தவன். மட்டக்களப்பு மாவட்டத்தில் பலர் சிரமத்தில் வாக்களிப்பதில்லை. பலரது வாக்குகள் நிராகரிக்கப்படும் வாக்குகளாக ஆகிவிடுகின்றது. இவற்றை நன்றாகக் கவனித்து வாக்களிக்க வேண்டும்.

“நான் சிவில் சமூகத்தின் போசகராகச் செயற்பட்டு வருகின்றேன். தேர்தல் பிரசாரங்களின்போது, இனவாதம், மதவாதம், மொழிவாதம் இருக்கக்கூடாது. அதனைத் தவிர்க்கவேண்டும். வேட்பாளர்கள் வன்முறைகளைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். தேர்தலுக்கு முன்னரும் தேர்தலின் போதும் தேர்தலுக்குப் பின்னரும் இந்த ஒழுக்கங்களை அனைவரும் பின்பற்றி நடக்க வேண்டும்” என்றார்.

## ‘ஐ.தே.கவை திருமணம் முடிக்கவில்லை’

எஸ்.கணேசன்



“நான் ஐக்கிய தேசிய கட்சியைத் திருமணம் முடிக்கவில்லை. அதன் தலைமையகமான சிறிகொத்தவில் வாழவும் இல்லை. எனவே, அக்கட்சியில் இருந்து என்னை நீக்கியதால் துளியளவும் கவலை இல்லை. ஏனெனில் மலையக மக்கள் என்னுடன் இருக்கின்றனர்” என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட வேட்பாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பதுளை, லுணுகலை - ஹொப்டன் பகுதியில், நேற்று (01) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பதுளை மாவட்டத்தில், தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிப்பதற்கு பல சூழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் வாக்குகளைச் சிதறடிப்பதற்காகவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.



# பெருநாள் தொழுகை

நாட்டிலுள்ள முஸ்லிம் மக்கள், தியாகத் திருநாளாம் ஹஜ்ஜூப் பெருநாளை, நேற்று (01) கொண்டாடினர். அந்த வகையில், வாழைச்சேனை, பதுளை, கிண்ணியா, மூதூர், முள்ளிப்பொத்தானை, கந்தளாய், புல்மோட்டை பிரதேசங்களில் உள்ள பள்ளிவாசல்களில் ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகைகள், சுகாதார நடைமுறைகளுடன் சிறப்பாக நடைபெற்றன. இதன்போது, கொரோனா நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்குமாறு வேண்டி துஆ பிராத்தனையும் நடைபெற்றது. (படங்கள் – எம்.எம்.அஹமட் அனாம், வாஹிட் குத்தூஸ், ஹஸ்பர் ஏ ஹலீம், ஏ.எம்.ஏ.பரீத், எப்.முபாரக்)

உரிமைப் போராட்டத்தில் பங்கேற்காதவர்கள்

## ‘வாக்குப் பிச்சைக் கேட்க வருகின்றனர்’

விஜயரத்தினம் சரவணன்

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களிலும் கவனயீர்ப்பு நடவடிக்கைகளிலும் பங்கெடுக்காத மாற்று இனத்தவர்கள் பலர், தற்போது தமிழ்மக்களிடம் வாக்குப் பிச்சைக் கேட்டு வருவதாக, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - ஒலுமடுப் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்துரைத்த அவர், “எமது மக்கள்மீது பிரயோகிக்கப்படும் அநீதிகளுக்கெதிராக நாம் போராடும்போது, வேறு இனத்தவர்கள் எமது உரிமைப் போராட்டங்களை நியாயமான கோரிக்கை என ஏற்று ஆதரவளிப்பதில்லை. ஆனால், தற்போது எமது தமிழ்மக்களின் வாக்குகளைச் சிதைக்கும் நோக்குடன், தமக்கு வாக்களிக்குமாறு வேற்று இனத்தவர்கள் பலர் தமிழ் மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்டு வருகின்றனர்” என்றார்.



“தமிழ்மக்களின் பூர்வீக நிலங்கள் பலவும் தற்போது ஆக்கிரமிக்கப்படுகின்றன. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் தமிழ்மக்களின் பூர்வீகக் காணிகள் பலவும் அபகரிக்கப்படுகின்றன. இதனைவிட கேப்பாப்பிலவு, வட்டுவாகல், பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாம் ஆகிய பகுதிகளில், இராணுவத்தினர் தமிழ்மக்களின் காணிகளை அபகரித்து வைத்துள்ளனர். இவ்வாறு இடம்பெறும் தமிழ்மக்களின் உரிமைசார் போராட்டங்களில் இன ரீதியாக சிங்களக் கட்சிகளோ, முஸ்லிம் கட்சிகளோ பங்கெடுப்பதில்லை. தமிழர்களின் போராட்டங்கள் நியாயமானவை என அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், தற்போது வேற்று இனத்தவர்கள் பலரும் எமது தமிழ் வாக்குகளைச் சிதைக்க, எமது தமிழ் மக்களிடமே வாக்குப் பிச்சை கேட்கின்றனர்” என்றார்.

முன்னாள் எம்.பி ஸ்ரீதரனின்

## விளம்பரப் பதாகை மீது துப்பாக்கிப் பிரயோகம்

எஸ்.என்.நிபோஜன்

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேசத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் சி.ஸ்ரீதரனின் பதாகை மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அமைப்பாளர் ஒருவரே, இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார் என்று தெரியவருகிறது.




எனினும், இச்சம்பவம் தொடர்பில் எவ்வித முறைப்பாடும் கிடைக்கப்பெறவில்லை என்று, கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

## ‘வெறுக்கத்தக்கவாறு பேசுபவர்களை வெறுத்தொதுக்க வேண்டும்’

ஏ.எச்.ஏ.ஹுஸைன்

“அரசியலுக்காக வெறுக்கத்தக்க பேச்சுகள் பேசி, சமூகங்களை விரிசலடையச் செய்யும் அரசியல்வாதிகளை, சிவில் சமூகம் வெறுத்தொதுக்க வேண்டும்” என்று, மட்டக்களப்பில் நேற்று (01) நடைபெற்ற சிவில் சமூகத்தின் வகிபாகக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையின் இணைப்பாளர் இராசையா மனோகரன் தலைமையில், பசுமை விடுதியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுக்குழு அங்கத்தவரும் கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தருமான தங்கமுத்து ஜயசிங்கம்



வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரைக்கையில்,

“ தற்போது ஆட்சியாளர்களிடம் மேலோங்கியுள்ள விடயம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்க வேண்டும் என்பதேயாகும். ஆனால், இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு தேவை என்பது, மறுபுறத்தில் மற்ற மூன்றில் ஒரு பிரிவினராக உள்ளவர்களின் விருப்பங்களை, எதிரணியினரின் தேவைகளை, விருப்பமின்மையைப் புறந்தள்ளிவிட்டு எதேச்சதிகாரமாக முடிவெடுப்பதற்காக இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்காக இந்த நாடு அவதிப்படுகிறது என்ற கேள்வியும் எழும்புகிறது.

“இவ்வாறான நிலையில், நாட்டுமக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கு போட்டியிடும் வேட்பாளர்கள் மக்களிடையே இனவாதத்தையும் மதவாதத்தையும், வெறுக்கத்தக்க பேச்சுகளையும், வன்முறைகளையும் தோற்றுவிக்கின்றனர். எனவே இவற்றைச் சிவில் சமூகம் சீர்தூக்கிப் பார்த்து வெறுத்தொதுக்க வேண்டும்” என்றார்.

## ‘ஐ.ம.சவின் மூவரும் வெல்வர்’

ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் போட்டியிடும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர்கள் மூவரும், அமோக வெற்றி பெறுவார்கள் என, தொழிலாளர் தேசிய முன்னணியின் நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் எம். இராமசந்திரன் தெரிவித்தார்.

வேட்பாளர்களான பழனி திகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன், எம். உதயகுமார் ஆகியோரை ஆதரித்து, நோட்டனில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மலையகத்தில் 40 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் வாய்ப்பைத் தவறிவிட்ட அமரர் ஆறுமுகனின் கனவை, அவருடைய மகன் ஜீவன் நிறைவேற்றப் போவதாக, மேடைகளில் கூறி



வருவதாகவும் மலையகத்தின் பொருளாதாரத்தை வெறும் 5 வருடங்களில், அடித்து நிமிர்த்திவிடப் போவதாகவும் அதற்கான பலத்தைத் தருமாறும் கோரி நிற்பதாகவும் தெரிவித்தார்.

“தம்பி ஜீவன், உங்கள் அப்பா ஆறுமுகன் தொண்டமானுக்கு, மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல வாய்ப்புகள் கிடைத்தும் தவறவிட்டார் என்பது உங்களுக்குத் தெரியுமா?, அவர் 1994-2020 வரை சுமார் 26 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா? அதில் 20 வருடங்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்தார் என்பதாவது உங்களுக்குத் தெரியுமா?” என்று இதன்போது அவர் கேள்வியெழுப்பினார்.

இத்தனை காலம் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சராக இருந்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாமல் போய்விட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

“மக்களை சிந்திக்கச் சொல்லும்முன் நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். மேற்கூறிய ஏதேனுமொரு துறையில் மக்கள் திருப்தியடைந்திருக்கிறார்களா? கடந்த நான்கரை வருடங்களை குறைசொல்ல உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது” என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

அதேபோல, இதுவரை காலமும் எந்த ஓர் உறுப்பினராலும் செய்திராத வகையில் பிரதேச பாடசாலைகளின் சுகாதார மேப்பாட்டுத் திட்டங்களினூடாக, மலசலகூடங்கள் அமைத்தல், கொங்கிரீட் பாதை அமைத்தல், குடிநீர் திட்டம், தனி வீட்டுத்திட்டம் சமூர்த்திக் கொடுப்பனவு திட்டத்தில் 160 பேரை உள்வாங்குதல் என, தலைவர் பழனி திகாம்பரத்தின் ஆலோசனையின் பேரில், பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அமைச்சுப் பதவிகளைக் கொண்டு

# ‘தமிழ்த் தேசியத்தை காப்பாற்ற முடியாது’

■ கே.எல்.ரி. யுதாஜித்

“எமது மிகப் பெரிய அறிஞர்களே, அமைச்சுப் பதவிகளால் தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்ற முடியாது என்பதை வரலாறாக்கியுள்ளார்கள். அந்நிலையில், அமைச்சுப் பதவியைக் கொண்டு, இவர்களால் எதனைச் சாதிக்க முடியும்?” எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் கி.துரைராசசிங்கம் கேள்வியெழுப்பினார்.

“தமிழர்கள் அமைச்சுப் பதவியை ஏற்ற பொழுதெல்லாம், அந்த அமைச்சுப் பதவிகளைக் கொண்டு, தமிழர்களுக்கு என்ன இன்னல்களை விளைவிக்கலாம் என்றே சிங்களத் தேசியம் சிந்தித்தது” எனவும் அவர் தெரிவித்தார்.

மாவடிவேம்பில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், “உரிமையோடு வாழ வேண்டிய எமது இனத்தின் மீது, வெறுமனே



அபிவிருத்தி என்னும் மாஜையைத் திணித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

“எங்களது பார்வையில், அபிவிருத்தி என்பது ஐக்கிய நாடுகள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல, பொருளாதார உரிமை என்ற அடிப்படையிலேதான் பார்க்கின்றோம். அந்த உரிமையையும் மேற்கொள்வதற்கு நாங்கள் பின்நிற்கவில்லை.

“அடிமைகளாக இருந்து கொண்டு, அபிவிருத்திக்குக் கையேந்த மாட்டோம். உரிமையுடன் எங்கள் பொருளாதார உரிமையையும் பெற்றுக்கொள்வோம்.

“பெரிய அறிஞர்களே, அமைச்சுப் பதவிகளால் தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்ற முடியாது என்று உணர்ந்து வந்த நிலையில், இப்போது நம்மில் பலர், அமைச்சுப் பதவியை ஏற்று, அமைச்சர்களாகப் போகின்றார்களாம். அமைச்சரவையிலே இவர்களுடைய வார்த்தைகள் எடுபட மாட்டாது. இவர்களால் அமைச்சுப் பதவியைக் கொண்டு எதையும் சாதிக்க முடியாது.

“தொடர்ச்சியாகத் தமிழ்த் தேசியத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் அமைச்சுப் பதவி எடுத்த போதிலும் கூட, அவர்கள் மக்களால் தோற்கடிக்கப்பட்டார்கள்.

“இந்த மண் எங்களின் சொந்த மண். இந்த அடிப்படையிலே, நாங்கள் தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதியோடு இருக்கின்றோம். வீர சுதந்திரம் வேண்டிப் போராடிய எங்கள் இளைஞர்களின் கனவுகள் தகர்ந்துவிடவில்லை. அதைத் தகர்க்க விடமாட்டோம் என்பதை, 2010ஆம் ஆண்டு தொடக்கம் வந்திருக்கின்ற ஒவ்வொரு தேர்தலிலுமே, நாங்கள் நிரூபித்திருக்கின்றோம். அந்த வகையிலே, இந்தத் தேர்தலிலும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்” என்றார்.

வாக்களிக்கத் தவறினால்

# ‘எமது பிரதேசங்கள் பறிபோகும்’

■ வா.கிருஸ்ணா, வ.சக்தி

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களிக்காமல் விட்டால், மங்களகம, கெவுளியாமடு கிராமங்களைப் போல் நமது பிரதேசங்களும் பறிபோகுமெனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் இரா. சாணக்கியன் எச்சரித்தார்.

களுவாஞ்சிக்குடியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், தொல்பொருள்களைப் பாதுகாப்பதற்காக ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட செயலணியில் தமிழ் பேசும் பிரதிநிதிகள் எவரும் இல்லையென்றார்.



இந்நிலையில், தொல்பொருள்கள் விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வழக்குகளைப் பதிவு செய்யவுள்ளதாகத் தெரிவித்த அவர், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கூறினார்.

கரையோரப் பகுதியைத் தங்களுக்குப் பறித்தெடுக்கும் முகமாகவே, இந்தத் தொல்பொருள் செயலணி அமைக்கப்பட்டு உள்ளதாகவும் இது தொடர்பில் தமிழ் மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமெனவும், சாணக்கியன் மேலும் எச்சரித்தார்.

“அரசாங்கம் உருவாக்கிய தொல்பொருள் ஆய்வு செய்வதற்கான ஜனாதிபதி செயலணி, தொடர்பான அதிருப்திகளையும், இவ்வாறான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கக் கட்சியில் இருப்பவர்கள் மக்களோடு இருந்து கொண்டு, கோசம் போட வேண்டியதில்லை. அவர்கள் அவர்களது அரசாங்கத்திடம் தெரிவித்து, இதற்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும்” எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப

# ‘ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படுவோம்’



■ எம். கிருஸ்ணா

“ஐக்கிய தேசிய கட்சி இனவாதம், மதவாதம் போன்றவற்றைக் கொண்டல்லாமல், எப்போதும் சமத்துவத்தை ஏற்படுத்திய தனித்துவமான கட்சி ஆகும். தமிழ், முஸ்லிம் தலைமைகள் தனித்தனியான கட்சியாக இருந்தாலும், ஒன்றிணைத்து அவர்களை வெற்றிபெறச் செய்வது ஐக்கிய தேசிய கட்சி” என, களுத்துறை மாவட்டத்தில் ஐ.தே.கவில் போட்டியிடும் சண்.பிரபா தெரிவித்தார். அட்டுளுகமவில் பெருமளவாக ஐ.தே.க ஆதரவாளர்கள் கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “ஐ.தே.க உடன் இருந்து, நன்றியுணர்வு இல்லாது, மக்களுக்குச் சரியான சேவைகள் செய்யாது, வெற்றி பெறுவோமா என்ற அச்சத்திலேயே சிலர் சஜித் அணியில் இணைந்துள்ளனர். ஆனால், இதுவரை காலமும் நன்றி உணர்வுடன் இருந்தவர்கள் ஐ.தே.வுடன் இணைந்திருப்பார்கள்.

“முஸ்லிம் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கூட்டத்தில், பாலித்த தேவரப்பெருமவுக்கு இவர்கள் அளிக்கும்பேராதரவு மகிழ்ச்சியைத் தருகிறது. அவருடன் இணைந்து, சிறுபான்மைத் தமிழ் மக்கள் பிரதிநிதியாகிய என்னையும் இதில் இணைத்து, இங்கு மூவினத்தையும் ஒன்றாக இணைத்திருப்பது தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தவதாக இருக்கின்றது. தங்களை வளர்த்துக்கொள்கின்ற இனவாத தமிழ், முஸ்லிம் தலைமைகளுக்கு அப்பால் சென்று, தேசிய ரீதியான ஒற்றுமையை நாம் கட்டியெழுப்புவோம். இதற்கு ஐ.தே.க இணைந்து செயற்படுவோம்” என்றார்.

சலுகைகளுக்கு ஏமாறாமல்

# ‘உரிமைகளை உணர்ந்து வாக்களிக்க வேண்டும்’

“வாக்காளர்கள், சலுகைளுக்கு ஏமாறாமல், நிரந்தர உரிமைகளை உணர்ந்து வாக்களிக்க வேண்டும்” எனப் புரட்சித் தமிழர் பேரவையின் பதுளை மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி மா.சிறில்ராஜ் தெரிவித்தார்.

ஹப்புத்தளை பகுதியில் நேற்று முன்தினம் (31) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய போதே, அவர் இதனைக் கூறினார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், “கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய எவரும் சரியான சேவையை வழங்கவில்லை. அண்டாக்களையும் விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி, மக்களை வஞ்சித்தனர். இம்முறை அவ்வாறு சலுகைகளுக்கு ஏமாறாமல் உரிமைகளுக்காக வாக்களிக்க வேண்டும்.

“ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வை இதுவரை பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே, வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தீர்மானிக்கப்பட வேண்டும். மொத்தத்தில், கிழிந்த உடைகளை மாற்ற வேண்டிய காலம் வந்துள்ளது” என்றார்.

> **கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய எவரும் சரியான சேவையை வழங்கவில்லை. மொத்தத்தில், கிழிந்த உடைகளை மாற்ற வேண்டிய காலம் வந்துள்ளது**

என்னை விலை பேச

# ‘கருணாவிடம் பணம் இல்லை’

■ கனகராசா சரவணன்

“என்னை விலை பேச கருணாவிடம் பணம் இல்லை” எனத் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

சொறிக்கல்முனை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், “எங்களுடைய இருப்பு, இந்த மாவட்டத்தில் கேள்விக்கு உள்ளாகியுள்ளது. நாளுக்கு நாள் மாற்றுக் கட்சிகளும் கருணா போன்றோரும் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு, கூட்டமைப்பை அவதூறாகப் பேசி வருகின்றனர்.

“நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் பெரும்பாலான காணிகளை



மீட்டுக்கொடுக்க வில்லையா, பாடசாலைகளை மீட்டுக்கொடுக்க வில்லையா எனவும் கேள்வியெழுப்பியுள்ளார். இவ்வாறு அரச படையின் ஆதிக்கத்துக்குள் இருந்த பல காணிகள் மீட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன.

“இந்நிலையில், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ் நேசனும் நானும் தன்னுடைய பக்கம் தாவிவிடுவோம் எனவும் கருணா கூறுகின்றார். ஆனால், 2006ஆம் ஆண்டு, என்னுடன் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரைச் சுட்டு வீழ்த்தியவர் தான் இந்தக் கருணா. தமிழ்த் தேசியம் பற்றிப் பேசமுடியாத காலகட்டம் தான் அப்போது இருந்தது. அப்போது என்னை விலைகொடுத்து வாக்குவதற்கு கருணாவிடம் பணம் இருக்கவில்லை. ஆனாலும் அவருடைய நயவஞ்சகத் தனத்துக்கு நாம் துணை போபவர்களும் இல்லை.

“வடக்கு, கிழக்கு பிரதேசங்களில், தமிழ் மக்கள் எம்மை ஏக பிரதிநிதிகளாக ஏற்று இருக்கிறார்கள். எமது கல்வியாளர்களை அழித்து, எமது பொருளாதாரத்தைச் சிதைத்து, அரசாங்கத்துக்குத் துதிபாடும் கருணாவால் எப்போதும் எமது மக்களுக்கு நன்மை இல்லை” என்றார்.

> **எமது கல்வியாளர்களை அழித்து, எமது பொருளாதாரத்தைச் சிதைத்து, அரசாங்கத்துக்குத் துதிபாடும் கருணாவால் எப்போதும் எமது மக்களுக்கு நன்மை இல்லை**

கொழும்பு மாவட்டத்திலுள்ள

# ‘தோட்ட மக்களுக்கு 7 பேர்ச் காணி’

கொழும்பு மாவட்டத்தில் தோட்டப்பகுதிகளில் வசித்துவரும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு, தேர்தலில் வெற்றியீட்டியதன் பின்னர், 7 பேர்ச் காணியை வழங்குவது தொடர்பில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியுள்ள அதேவேளை, தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென, பொதுஜன பெரமுன சார்பாக, கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் சட்டத்தரணி மதுர விதானகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன, இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கிடையில், கொஸ்கம பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், “பெருந்தோட்டங்கள் மலையகத்திலேயே உள்ளன என்று எங்களில் பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், கொழும்பு மாவட்டத்திலும் பெருந் தோட்டங்கள் பல உள்ளன. இதனைப் பலர் அறிவதில்லை. இம்மாவட்டத்திலுள்ள இறப்பர், தேயிலைத் தோட்டங்களில் வசிக்கும் மக்களின் தேவைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு உதவுவது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பாகும் என்றார்.



“கொழும்பிலிருந்து 25 மைல் தொலைவில் பாதுக்கை, வேரகல, ஹேவாகம, அயர், வக, பின்னவல, சிறினிவாச, சாலாவ,கனம்பெல்ல, எல்ஸ்டன், பென்றித் உள்ளிட்ட பல தோட்டங்கள் உள்ளன. இந்தத் தோட்டங்களில் வேலை செய்யும் மக்களின் தேவைகளைக் கவனிக்கும் பொறுப்பு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே உள்ளது.

மலையகத்திலுள்ள தொண்டமானும் திகாம்பரமும் பெருந்தோட்ட மக்கள் மீது அக்கறை காட்டினாலும், ஓர் அவசரம் எனும்போது, அருகிலுள்ள கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே முதலில் வருவார்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

“எனவே, கொழும்பு மாவட்டத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்கள், அவர்கள் மீது அக்கறை கொண்டுள்ள வேட்பாளர்களுக்கே வாக்களிக்க வேண்டும்” என்றார்.

> **மலையகத்திலுள்ள தொண்டமானும் திகாம்பரமும் பெருந்தோட்ட மக்கள் மீது அக்கறை காட்டினாலும், ஓர் அவசரம் எனும்போது, அருகிலுள்ள கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே முதலில் வருவார்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்**

மலையக இளைஞர், யுவதிகள்

# ‘வாக்குரிமையைப் பயன்படுத்துவது தலையாய கடமையாகும்’



■ எம். செல்வராஜா

“நாட்டின் வெளி மாகாணங்கள், மாவட்டங்களில் தொழில், கல்விச் செயற்பாடுகள் நிமித்தம் வசித்து வரும் மலையக இளைஞர், யுவதிகள் அனைவரும் தமக்குரிய வாக்குரிமைகளைப் பயன்படுத்த வேண்டியது தமது தலையாய கடமையென்பதை உணர்ந்து செயற்படல் வேண்டும்” என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட வேட்பாளர் அ.அரவிந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றின் மூலம், மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தொடர்ந்து அவ்வேண்டுகோளில், “பதுளை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஆயிரக்கணக்கான பதுளை மாவட்ட பெருந்தோட்டங்களைச் சார்ந்த இளைஞர், யுவதிகள் தோட்டத்தை விட்டுச் சென்றவர்கள், வெளி மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் பல்வேறு தொழிற்றுறைகளில் தொழில் செய்து வருகின்றனர்.

“அத்துடன், சிலர் கல்விச் செயற்பாடுகள் விடயமாகவும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். ஆனால், இவர்கள் அனைவரும் பதுளை மாவட்ட வாக்காளர்களாகவே இருந்து வருகின்றனர். அவர்களுடைய பெறுமதிமிக்க வாக்குகள் பயன்படுத்தப்பட்டேயாக வேண்டும்.

“இவ்வாறு பயன்படுத்தப்படும் வாக்குகள், எமது சமூகப் பிரதிநிதித்துவங்களை உருவாக்குவதற்கு வழி வகுக்குமென்பதை, எமது சமூக இளைஞர், யுவதிகள், தோட்டத்தை விட்டுச் சென்றவர்கள் புரிந்துகொள்ளுதல் வேண்டும். குறிப்பிடப்படும் இவ்வாக்குகள் அளிக்கப்படாதவிடத்து, எமது சமூகப் பிரதிநிதித்துவங்களும் இல்லாது போய்விடும். இதனால் பாதிக்கப்படுபவர்கள், எமது சமூகத்தினரேயாவார்.

“தமக்கு இருந்து வரும் வாக்குரிமைகளைப் பயன்படுத்த வேண்டியது, தாம் சார்ந்த சமூகத்துக்கு ஆற்றும் அதியுயர் தார்மிகக் கடமையாகும்” என்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் ஞாயிற்றுக்கிழமை, 2 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.